பக்கங்கள்:-16

காலை முரசு

## யாழில் தமிழரசு இன்று வேட்புமனு



(எஸ்.நிதர்ஷன்) வரும் நாடாளு மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர் தல் மாவட்டத்தில் போட்டி 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 24 | வியாழக்கிழமை | 10.10.2024 | அதிர்வு 069



# தமிழரசின் அதிருப்திக் குழு யாழில் தனித்துப் போட்டி!

### தவராசா தலைமையில் சுயேச்சைக் குழுவாகக் களமிறங்குகின்றது

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலால் அதிருப்திய டைந்த அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஜனாதிபதி சட்டத் தரணி கே.வி. தவராசா தலைமை யில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டத்தில்சுயேச்சைக்குழுவாகப்போட்டி யிடவுள்ளனர் என்று அறியமுடிகின் றது. ஜனநாயகத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் இந்தச் சுயேச்சைக் குழு தேர்தலில் களமிறங்கவுள்ளது என்றும் தெரியவருகின்றது. 06

## இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானம் வாக்கெடுப்பின்றி நேற்று நிறைவேற்றம்

### வெளிப்புறப் பொறிமுறையைத் திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசு நிராகரிப்பு



இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரி மைகளை மேம்படுத்துவதற்கான தீர்மான வரைவு வாக்கெடுப்பின்றி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது 06



இலங்கைத் தமிழரசு கட்சி பெரும்பாலான இடங்களில் இன்று காலை தனது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது

திருகோணமலை தவிர ஏனைய தமிழ் மாவட்டங்களில் வேட்பாளர்கள் தெரிவைத் தமிழரசு கட்சி பெரும்பாலும் பூர்த்தி செய்து விட்டது. திருமலை வேட்பாளர் தெரிவில் இழுபறி நீடித்தாலும் பெரும்பாலும் இன்று மாலைக்கும் முன்னர் வேட்பாளர் இறுதிப் பட்டியல் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

யாழ் மாவட்டத்தை பொறுத்தவரை தமிழ ரசின் வேட்பாளர் பட்டியலில் சுமந்திரன், சிறிதரன் ஆகிய இருவரும் உள்ளனர். இவர்களில் யார் தலைமை வேட்பாளர் என்ற கேள்வி உள்ளது.

வேட்பாளர் நியமனப் பத்திரத்தில் முத லாவது இடத்தைசிறிதரனுக்குவிட்டுக்கொடுத் தமை மூலம் அவரை கட்சியின் யாழ் மாவட்ட தலைமை வேட்பாளராக சுமந்திரனும் ஏற்றுக் கொண்டுள்ளார். 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# தமிழரின் சுயநிர்ணய உரிமையை அநுர அரசு ஏற்றுக்கொண்டால் சேர்ந்து பயணிக்கத் தயார்

## தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் விக்கி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு ஏற்றுக்கொண்டால் அரசுடன் சேர்ந்து முன்செல்லத் தயாராக இருக்கின்றோம்."

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் நேற்று புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இன்று (நேற்று) தாக்கல் செய்துள்ளது. இளைஞர்களைக் களமிறக்கி இளைஞர் அணியை எமது கட்சி நிறுத்தியுளது.

நான் ஏற்கனவே கூறியது போன்று கூட்டணியில் இளைஞர்களுக்கு மிக முக்கியத்துவம் அளித்து தேர்தலில் இருந்தும் ஒதுங்கிக்கொண்டுள்ளேன்.

இந்தக் கட்சியின் முக்கியமான கொள்கைகளளாக தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறை இருக்கின்றது. இந்த இலக்கு அடையும் வகையில் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியம்.

அநுரகுமார அரசு புதிய அரசமைப்பைத் தயாரிக்கவுள்ளதாம். அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என என்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும்போது வடக்கு, கிழக்கில் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்தனர். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்பதை அநுரகுமார அரசு உண்மையில் ஏற்றுக்கொண்டால் அரசுடன் சேர்ந்து முன்செல்லத் தயாராக இருக்கின்றோம்.

தமிழரசுக் கட்சி முன்னர் இருந்த பலரும் தற்போது அந்தக் கட்சிக்குள் இப்போது நடைபெறும் சம்பவங்கள் காரணமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அதிலும் பலர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மனவருத்தத்தில் உள்ளனர். இதனால் ஒரு சிலர் வெவ்வேறு கட்சிகளுடன் இணைந்துள்ளனர்.

குறிப்பாக தேசிய மக்கள் சக்தியினர் அதிகளவான இளைஞர்களை உள்ளீர்த்தமை போன்று நாமும் இளைஞர்களை உள்ளீர்த்துப் பலமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

இந்தத் தேர்தலில் மற்றக் கட்சிகளை நாங்கள் விமர்சனம் செய்யாமல் நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்பதையே கூறி எமது பிரசாரங்களை முன்னெடுப்போம்." – என்றார்.

# ஜனாதிபதி ரணிலின் இல்லத்துக்கு தீ; 5 ஆவது சந்தேகநபருக்கு பிணை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு தீ வைக்கப்பட்ட சம்பவத்தின் ஐந்தாவது சந்தேகநபருக்கு பிணையில் செல்ல கோட்டை நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு கோட்டை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கடுமையான பிணை நிபந்தனைகளுடன் சந்தேகநபரை விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிப்பதற்கு உத்தரவிட்ட நீதவான், எதிர்வரும் 11ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டுள்ளார்.





# புலிகளை ஒதுக்கிய நரிகளுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்

## வன்னியில் வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின் இன்பராஜா சூளுரை

(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை கந்தசாமி இன்பராஜா தலைமையிலான சுயேச்சைக் குழு நேற்று புதன்கிழமை தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியினர் சுயேச்சைக் குழுவில் போட்டியிடுகின்றனர்.

அவர்கள் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

இதன்போது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஊடகங்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த க.இன்பராஜா,

"நாங்கள் போராளிகள். மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகக் களம் இறங்கியுள்ளோம். இன்று மக்களும் போராளிகளும் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

தங்களுக்குள் முரண்பட்டு சண்டையிட்டுக்கொண்ட அரசியல்வாதிகள், தேர்தலுக்காகப் புற்றில் இருந்து ஈசல் வருவதுபோல் வருகின்றனர்.

இளையவர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் வாய்ப்புக் கொடுக்காமல் நரிகள் எல்லாம் வெளியே வருகின்றனர். ஆனால், அந்த நரிகளுக்குத் தக்க பாடம் புகட்ட மக்கள் தயாராகவுள்ளனர்." – என்றார்.









# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்னியில் வேட்புமனுத் தாக்கல்

(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று புதன்கிழமை தாக்கல் செய்தனர்.

முதலில் வவுனியா நகர சபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபிக்குச் சென்ற வேட்பாளர்கள் அங்கு அஞ்சலியில் ஈடுபட்டனர். அதன்பின்னர் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் சுப நேரத்தில் வேட்புமனுவை அவர்கள் தாக்கல் செய்தனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டி யிடுகின்றது.

இதன்போது வன்னி தேர்தல் மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளர் எஸ்.தவபாலன் மற்றும் ஏனைய வேட்பாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத் தரணி க.சுகாஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.















# வெங்காயத்திற்கான வரியின் பலன்கள் இடைத்தரகர்களையே சென்றடைகின்றன

உள்நாட்டு வெங்காய உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்திற்கு அரசாங்கம் வரி விதித்துள்ள போதிலும், அதன் பலன் இடைத்தரகர்கள் மற்றும் வர்த்தகர்களையே சென்றடைவதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

உள்நாட்டு வெங்காய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை வழங்குவதற்காக, இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்திற்கு அரசாங்கம் 20 ரூபா வரி விதித்ததையடுத்து, ஒரு கிலோகிராம் வெங்காயத்தின் விற்பனை விலை 180 முதல் 230 ரூபா வரை காணப்படுகிறது.

எனினும், சந்தையில் தங்களின் விளைச்சலுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வரி அதிகரிப்பினை இடைத்தரகர்களும் வெங்காயத்தை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுமே சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

# பொதுத் தேர்தலுக்கான கட்டுப்பணம் 246 சுயேச்சை குழுக்கள் செலுத்தின



எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக இதுவரை 246 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்காக இதுவரை 33 வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட 17 அரசியல் கட்சிகளும், 16 சுயேச்சை குழுக்களும் இதுவரை வேட்பு மனுக்களைக் கையளித்துள்ளன.

# முட்டையின் விலை அதிகரிக்கும்

அண்மையில் முட்டை ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்ட போதிலும், நாடளாவிய ரீதியில் பல இடங்களில் அந்த விலையில் முட்டைகளைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

20 முதல் 30 ரூபா வரை குறைந்திருந்த முட்டை ஒன்றின் விலை மீண்டும் 40 ரூபாவிற்கு மேல் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் சில பகுதிகளில் முட்டையின் விலை கிட்டத்தட்ட 50 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

உற்பத்தி குறைந்துள்ளதால் முட்டை விலை அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், தற்போதைய நிலவரத்தால் முட்டையின் விலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவரும்சேர்ந்தேயாழ்மாவட்டவேட்பாளர் நியமனப் பத்திரங்களை நிறைவு செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர். இதற்காக கிளிநொச்சியில் சிறிதரனின் அலுவலகமான அறிவகத்துக்கு நேற்று சுமந்திரன் சென்றிருந்தார்.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற தமிழரசின் வேட்பாளர் தெரிவுக்குழுக் கூட்டத்துக்கு மாவை சேனாதிராசா சமுகம் தரவில்லை. தாம் கட்சித் தலைவர் மற்றும் கட்சிப் பொறுப்புகளிலிருந்து வெளியேறி விட்டார் எனத் தாம் அறிவித்திருந்த காரணத்தினால் போலும்.

யாழ் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசு கட்சியின் வேட்பாளர் நியமனம் கிட்டாத முக்கிய பிரமுகர்கள் ஒன்றிணைந்து தமக்கென ஒரு கட்சியை வரித்துக் கொண்டு செயல்பட முடிவு செய்து இருக்கின்றனர்.

இந்த வகையில் கட்சியில் வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்ட கே.வி. தவராஜா, ஈ.சரவணபவன் போன்றோர் தனி சுயேச்சைக் குழு அமைத்து, இத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்து இருக்கின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சுயேச்சைக் குழு தங்களை 'ஜனநாயகத் தமிழரசு கட்சி' - என்று பெயர் சூட்டிச் செயற்படத் தீர்மானித்திருப்பதாகவும் ஒரு தகவல் உண்டு.

ஆனால், முன்னர் - 2015 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் - இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து மன்னார்ப் பிரமுகர் வி.எஸ்.சிவகரன் போன்றோர் வெளியேற்றப்பட்ட சமயம் அவரால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பின் பெயர் இந்த 'ஜனநாயகத் தமிழரசு கட்சி'.

அவரின் அனுமதியின்றி இப்பெயரைப் பயன்படுத்துவது அபத்தச் செயலாகும்.

இந்தச் சுயேச்சைக் குழுவில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் பொ.ஐங்கரநேசன் இணைகின்றார் என்ற தகவல் உண்டு.

அனந்தி சசிதரனை இந்த அணியில் இணைக்கவும் முயற்சி நடப்பதாகத் தெரிகிறது.

இந்த சுயேச்சைக் குழுவின் விவரம் இன்று தெரிய வரும் என எதிர்பார்க்கலாம்.

## யாழில் தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் இன்று வியாழக்கிழமை தாக்கல் செய்யவுள்ளனர்.

இதேவேளை, வன்னி, அம்பாறை மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் தெரிவு இறுதியாகிவிட்டது என்றும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் தெரிவு இன்னமும் நிறைவுறவில்லை என்றும் அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தலைச் சந்திக்கவுள் ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

## இலங்கை தொடர்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடரின் நேற்றைய அமர்வில் குறித்த தீர்மான வரைவு நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்புக்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்டச் செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புறப் பொறிமுறையைக் கட்டாயமாகத் திணிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் நேற்று சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"குறிப்பிட்ட தீர்மானத்தின் [57/எல்.1] நகல் வடிவம் ஐக்கிய நாடுகள் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கின்றது.

மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தையும் (51/1) அதற்கு முந்தைய தீர்மானத்தையும் (46/1) இலங்கை நிராகரித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மூலமே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்குள் ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டது.

நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலிருந்து எங்களை விலக்கிக்கொள்கின்றோம். அதற்கான காரணங்களை ஏற்கனவே சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளோம்.

தொடர்புபட்ட நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் சம்மதம் இன்றியே 51/1 தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. வாக்கெடுப்பின்போது உலக நாடுகள் அந்தத் தீர்மானம் குறித்து பிளவுபட்டிருப்பது வெளிப்பட்டது.

இதன்காரணமாகஅந்த51/1தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொது உடன்பாடு அற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்குள் ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையை ஏற்படுத்துவது முன்னர் ஒருபோதும் இடம்பெறாத விடயம்.

எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்புக்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புறப் பொறிமுறையைக் கட்டாயமாகத் திணிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது." - என்றார்.

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஏனைய பங்காளிக் கட்சிகள் வெளியேறி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகச் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தத் தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றது. அண்மை நாட்களாகத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழு வவுனியாவில் கூடி வேட்பாளர்களைத் தெரிவு செய்தது. வேட்பாளர்கள் தெரிவில் கட்சியின் உறுப்பினர்கள் பலருக்கும் அதிருப்தி ஏற்பட்டது. குறிப்பாக, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள் தெரிவில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில், தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் தெரிவால் அதிருப்தியடைந்தவர்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடவுள்ளனர் என்று அறியவருகின்றது.

இந்தச் சுயேச்சைக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியைச் சேர்ந்த விமலேஸ்வரி, ஐ.நாகரஞ்சினி, முன்னாள் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன், புதிய சுதந்திரன் பத்திரிகையின் உரிமையாளர் அகிலன் முத்துக்குமாரசுவாமி, ஊர்காவற்றுறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன் ஆகியோருடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனும் போட்டியிடவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இதேவேளை, இந்தச் சுயேச்சைக் குழுவில் போட்டியிடுவதற்குத் தென்மராட்சியின்க.அருந்தவபாலனைத்தமிழரசுக்கட்சியின் அதிருப்திக் குழுவினர் அணுகியுள்ளனர் என்றும் அறியவருகின்றது.

இந்தச் சுயேச்சைக் குழு நாளை வெள்ளிக்கிழமை தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் என்றும் தெரியவருகின்றது.

# தேயிலையின் சராசரி விலை ஓகஸ்ட் மாதத்தில் அதிகரிப்பு



கொழும்பு ஏலத்தில் தேயிலையின் சராசரி விலை, கடந்த ஓகஸ்ட் மாதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் தேயிலை கிலோ ஒன்றுக்கான சராசரி விலை 3.49 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இந்தநிலையில், கடந்த ஓகஸ்ட் மாதத்தில் தேயிலை கிலோவொன்றுக்கான சராசரி விலை 4.02 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# லெபனானில் உள்ள இலங்கையர்களுக்கு பதிவு செய்வதற்கு விசேட சலுகை காலம்




இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு பெறுவதற்காக, லெபனானில் உள்ள இலங்கையர்களுக்கு விசேட சலுகை காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானில் நிலவும் அசாதாரண நிலைமையினை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் மேற்கொண்டுள்ள பதிவுகள் காலாவதியான நிலையில் லெபனானில் பணியாற்றிவரும் இலங்கையர்களுக்கு, மேற்படி பதிவைப் புதுப்பிப்பதற்காக இந்த சலுகைக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதிவரை இந்த சலுகைக் காலம் அமுலில் இருக்கும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# யாழில் சுயேச்சையாகக் களமிறங்கும் பிரபல வர்த்தகரின் மகன்!






(எஸ்.நிதர்ஷன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சட்டத்தரணி நாகரத்தினம் கமலரூபன் தலைமையிலான குழுவினர் சுயேச்சையாகப் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை நண்பகல் வேட்புமனுவை அவர்கள் தாக்கல் செய்தனர்.

மேற்படி சுயேச்சைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி கமலரூபன் யாழ். பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

# முட்டை உற்பத்தி செய்வதற்கு 25 ரூபா மாத்திரமே செலவு



முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாக அதிகரித்துள்ள போதிலும் அதனை உற்பத்தி செய்வதற்கு 23 முதல் 25 ரூபா வரை செலவு ஏற்படுவதாக அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உற்பத்திச் செலவு குறைவாக உள்ளதன் காரணமாக, சந்தையில் முட்டையொன்றை 35 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என அந்தச் சங்கத்தின் செயலாளர் அனுரசிறி மாரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில நாள்களாக குறைவடைந்திருந்த முட்டை விலை, தற்போது 40 முதல் 45 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் முட்டை உற்பத்தி போதியளவு காணப்படுகின்ற போதிலும், இடைத்தரகர்கள் முட்டைகளைப் பதுக்கி வைப்பதாலும், உற்பத்திச் செலவு அதிகரிப்பதாலும் அதனைக் குறைந்த விலையில் வழங்க முடியாதுள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# தாமரை கோபுர சம்பவம் பெற்றோர் வாக்குமூலம்



கொழும்பு தாமரை கோபுரத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்த மாணவி, ஏற்கனவே உளவியல் ஆலோசனையைப் பெற்று வந்துள்ளார் என அவரது பெற்றோர் பொலிஸில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

மேற்படி மாணவியின் நெருங்கிய நண்பியும், நண்பரும் கொம்பனித் தெருவில் உள்ள தொடர்மாடிக் கட்டடம் ஒன்றிலிருந்து வீழ்ந்து கடந்த மூன்று மாதங்களுக்கு முன் உயிரிழந்தனர்.

அவர்களின் இழப்பை ஏற்றுக்கொள்ள முடியாததுள்ளதாகத் தெரிவித்து, கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்ததாகக் கொழும்பு தாமரை கோபுரத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்த மாணவியின் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், வகுப்பறையில் தனிமையிலிருந்து வந்த நிலையில், அவரது கல்விக்குத் தடை ஏற்பட்டிருந்தது.

உயிரிழந்த மாணவி, தமது குடும்ப அங்கத்தவர்களுடனான தொடர்பையும் குறைத்ததுடன், உணவு உண்பதையும் தவிர்த்து வந்ததாக அவரது பெற்றோர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், மாணவியின் இறுதிச் சடங்கு நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

இதேவேளை, கொழும்பு தாமரை கோபுரத்தில் இருந்து வீழ்ந்து மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கல்வி அமைச்சு ஐவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஒரே குட்டையின் மட்டைகள்

இலங்கையின் யுத்த கால விவகாரங்கள் தொடர்பாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2022 ஒக்டோபரில் நிறைவேற்றப்பட்ட 51/1 இலக்கத் தீர்மானம் கவுன்ஸிலின் நேற்று முடிவுற்ற 57 ஆவது அமர்வோடு பூர்த்தியாகும் நிலையில், அந்தத் தீர்மான விடயங்களை அப்படியே மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று கவுன்ஸிலில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு எதிராக தனது எதிர்ப்பை இலங்கை பதிவு செய்து கொண்டதாயினும் இலங்கை அரசின் நிலைப்பாடு வலிமையாக - உறுத்தி - வலியுறுத்தப்படவில்லை.

அதனால்தான் இலங்கையின் வெளிப்பூச்சு எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கை தொடர்பான நேற்றைய பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படாமல் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது விடயத்தில் முன்னைய கொழும்பு அரசுகள் காட்டிய இரட்டை முகத் தந்திரோபாயப் போக்கையே அநுரகுமார திஸநாயக்கவின் தற்போதைய அரசும் வெளிக்காட்டுகின்றது என்பது வெள்ளிடை மலையாய் தோற்றுகின்றது.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான பிரேரணை நீடிக்கப்படுவதை கடுமையாக எதிர்ப்பது போன்ற பிரதிபலிப்பு கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வில் இலங்கையின் எதிர்ப்பு மிக வலிமையாகப் பதியப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இலங்கை தனக்கு எதிராக இணை அனுசரணை நாடுகள் ஜெனிவாவில் முன்வைத்து, நீடிக்கும் இந்தப் பிரேரணையை முழுமூச்சில் எதிர்க்கத் தீர்மானித்திருக்குமாயின் தன்னுடைய எதிர்ப்பையும் தன்னுடன் சேர்ந்து தனக்கு ஆதரவான நாடுகள் காட்டும் எதிர்ப்பையும் வெளிப்படுத்திப் பதிவு செய்வதற்காக இந்த பிரேரணை விடயத்தில் இலங்கை வாக்கெடுப்பைக் கோரியியிருக்கும். கோரியிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல், ஒரு புறம் எதிர்ப்பதாக காட்டிக் கொண்டு, மறுபுறம் வாக்கெடுப்பின்றியே அந்த பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்படுவதை ஆட்சேபிக்காமலும் இலங்கை இருந்திருக்கின்றது.

இது அநுரகுமார திஸநாயக்க அரசின் கொழும்புக்கு ஒரு முகமும், சர்வதேசத்திற்கு பிறிதொரு முகமும் காட்டும் அணுகு முறையின் அங்கங்கள்தாம்.

இதேசமயம் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்சிஸில் நேற்று உரையாற்றிய இலங்கை அரசு தரப்பின் நிரந்தர பிரதிநிதி, புதிய அணுகுமுறைகள் பற்றி குறிப்பிட்டாலும், முந்தைய அரசுகளின் நிலைப்பாட்டில் இருந்து இந்த அரசும் மாறவில்லை என்பதை வெளிப்படுத்த தவறவில்லை.

இலங்கையில் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தாலும் அதனைக் கடந்த கால கொழும்பு அரசுகள் செயற்படுத்தாமலேயே இழுத்தடித்து வந்தன.

அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான இந்த அரசும் அதே போக்கைத்தான் இவ்விடயத்தில் கையாளப் போகின்றது என்பது நேற்று இவ்விடயத்தை ஒட்டி இலங்கையின் பிரதிநிதி ஆற்றிய உரையினால் உணர்ந்து கொள்ள முடிந்தது. கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகள், குற்றங்கள், மீறல்கள் தொடர்பில் உள்ளகப் பொறிமுறை ஒன்றின் மூலம் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கப்படும் என்று முன்னைய அரசுகளும் அரசுத் தலைவர்களும் ஜெனிவாவில் கூறி வந்த கருத்தையே இப்போது அநுரகுமார திஸநாயக்க அரசினுடைய பிரதிநிதியும் நேற்று ஜெனிவாவில் குறிப்பிட்டு இருக்கின்றார்.

வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் நீதியைப் பெற்றுக் கொடுக்கும் விவகாரத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அதிகார பீடமும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியும் நியாயமாக நடந்து கொள்ளப் போவதில்லை என்பது தெளிவு. மாறாக, முன்னைய அரசுகள் இது விடயத்தில் காட்டிய இழுபறித்தனத்தையே இந்த அரசும் தொடரப் போகின்றது. நேற்று ஜெனிவாவில் அரசுப் பிரதிநிதி ஆற்றிய உரை அதையே கோடிகாட்டி நிற்கின்றது.

# அரசியல் ஆதாயத்துக்காக இந்துக்களை பிரிப்பதற்கு விரும்பும் காங்கிரஸ் கட்சி

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு



அரசியல் ஆதாயங்களுக்காக காங்கிரஸ் கட்சி இந்துக்களை பிரிக்க முயல்வதாக பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

மகாராஷ்டிராவில் 7,600 கோடி ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா இன்று நடைபெற்றது. இதில், டில்லியில் இருந்தவாறு காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டு பிரதமர் மோடி திட்டங்களை தொடங்கிவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,

“இன்று மகாராஷ்டிராவுக்கு 10 மருத்துவக் கல்லூரிகள் வழங்கப்படுகின்றன. மேலும், நாக்பூர் மற்றும் ஷீரடி விமான நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு விரிவாக்கப்பட உள்ளன. மகாராஷ்டிரா வரலாறு காணாத வேகத்தில் வளர்ந்து வருகிறது. மகாராஷ்டிராவின் வரலாற்றில் இதற்கு முன் இவ்வளவு வேகமாகவும், பெரிய அளவிலும் பல்வேறு பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் நடந்ததில்லை.

சமீபத்தில், மராத்தி மொழிக்கு “செம்மொழி” அந்தஸ்து வழங்கப்பட்டது. இது மராத்தி கலாச்சாரத்தை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உதவும். கோடிக்கணக்கான மராத்தி மக்களின் பல ஆண்டு கால கனவு நனவாகியுள்ளது. இதற்காக, மகாராஷ்டிரா மக்கள் தளங்களில் எனக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். ஆனால், இந்த பணி என்னால் அல்ல, உங்கள் அனைவரின் ஆசீர்வாதத்தால் முடிந்தது.

ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநில தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. நாட்டின் மனநிலை என்ன என்பதை ஹரியானா காட்டியுள்ளது. இரண்டு ஆட்சிக் காலத்தை முடித்துவிட்டு தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வரலாற்று சிறப்புமிக்கது. மூன்றாவது பதவிக்காலத்தை எங்களுக்கு ஆசீர்வதித்ததன் மூலம் ஹறியானா, நாட்டின் மனநிலையை பிரதிபலித்துள்ளது.

காங்கிரஸின் நகர்ப்புற நக்சலைட்டுகள், பொய்ப் பிரச்சாரத்தை மக்களிடையே பரப்புவதில் மும்முரமாக இருந்தனர். ஆனால் காங்கிரஸின் சதிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுவிட்டன. தலித்துகள் மத்தியில் பொய்களைப் பரப்ப காங்கிரஸ் முயன்றது. ஆனால் தலித் சமூகம் அவர்களின் ஆபத்தான நோக்கத்தை உணர்ந்து கொண்டது. தங்கள் இடஒதுக்கீட்டைப் பறிப்பதன் மூலம் காங்கிரஸ் தனது வாக்கு வங்கியைப் பிரிக்க விரும்புவதை தலித்துகள் உணர்ந்தனர்.

முஸ்லிம்கள் மனதில் அச்ச உணர்வை காங்கிரஸ் உருவாக்கி வருகிறது. அவர்களிடம் அச்சத்தை காங்கிரஸ் திணிக்கிறது. தங்கள் வாக்கு வங்கிக்காக, காங்கிரஸ் நாட்டை வகுப்புவாதமாக்குகிறது. ஹரியானாவின் இதர பிற்படுத்தப்பட்ட மக்களும் பா.ஜ.கவின் வளர்ச்சிப் பணிகளைப் பார்த்து, அவர்களும் பா.ஜ.கவோடு இருக்கிறார்கள்.

காங்கிரஸ் விவசாயிகளை தூண்டி விட்டது. ஆனால், பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை யார் கொடுத்தார்கள் என்பது விவசாயிகளுக்குத் தெரியும். பாஜகவின் விவசாயிகள் நலத் திட்டங்களால் ஹரியானா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காங்கிரஸ் இளைஞர்களை குறிவைத்து பல்வேறு வழிகளில் தூண்டிவிட முயன்றது. ஆனால் ஹரியானா இளைஞர்களும், நமது சகோதரிகளும், மகள்களும் தங்கள் பிரகாசமான எதிர்காலத்திற்கு பா.ஜ.கவை மட்டுமே நம்புகிறார்கள்.

மக்களை பிரித்து ஆட்சியைப் பெறுவது என்ற ஃபார்முலாவை காங்கிரஸ் எப்போதும் கடைப்பிடித்து வருகிறது. காங்கிரஸ் பொறுப்பற்ற கட்சி என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது. நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு அவர்கள் பல புதிய கதைகளை உருவாக்குகிறார்கள். சமூகத்தை பிளவுபடுத்துவதற்கான சூத்திரத்தை காங்கிரஸ் தொடர்ந்து செய்து வருகிறது.

ஒவ்வொரு நாளும், மக்கள் மனதில் வெறுப்பு விதைகளை விதைக்கிறார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு, மகாத்மா காந்தி காங்கிரஸின் கீழ்த்தரமான நோக்கங்களை உணர்ந்தார், அதனால்தான் அவர் கட்சியை கலைக்க விரும்பினார்.

இந்துக்களில் ஒரு சாதியை இன்னொரு சாதிக்கு எதிராகப் போராட வைப்பதுதான் காங்கிரஸின் கொள்கை. இந்துக்கள் எந்த அளவுக்குப் பிரிகிறார்களோ, அந்த அளவுக்குப் பலன் கிடைக்கும் என்பது காங்கிரசுக்குத் தெரியும். எல்லா வகையிலும் இந்து சமுதாயம் தீ பற்றி எரிய வேண்டும் என்று காங்கிரஸ் விரும்புகிறது. ஏனெனில், அதன் மூலம் அரசியல் லாபம் ஈட்ட அக்கட்சி எண்ணுகிறது. இந்தியாவில் எங்கு தேர்தல் நடந்தாலும் காங்கிரஸ் இதே ஃபார்முலாவைத்தான் கடைப்பிடிக்கிறது. காங்கிரஸ் முழுக்க முழுக்க வகுப்புவாத மற்றும் சாதிய அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுகிறது. காங்கிரஸ் அரசியலின் அடிப்படையே இந்து சமுதாயத்தை உடைத்து, அதனை தனது வெற்றிக்கான சூத்திரமாக மாற்றுவதுதான்.

அனைவருக்கும் நலன் எனும் இந்தியாவின் பாரம்பரியத்தை காங்கிரஸ் நசுக்குகிறது. ஒரு நாட்டின் இளைஞர்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கும்போதுதான் உலகம் அந்த நாட்டை நம்புகிறது. இளம் இந்தியாவின் தன்னம்பிக்கையில்தான், இந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது. உலகின் பெரிய நாடுகள் இன்று இந்தியாவை மனித வளத்தின் முக்கிய மையமாக பார்க்கின்றன. காங்கிரஸ்/க்கு வளர்ச்சியின் மீதும், பாரம்பரியத்தின் மீதும் அக்கறை இல்லை. நமது அரசாங்கத்தில் வளர்ச்சியும் பாரம்பரிய மரபும் உள்ளது. நமது வளமான கடந்த காலத்திலிருந்து உத்வேகம் பெற்று, ஒளிமயமான எதிர்காலத்தை நாம் உருவாக்கி வருகிறோம்.”

–என தெரிவித்தார்

# பவன் கல்யாணுக்கு எதிராக புகார் அளித்த மதுரை வழக்கறிஞரிடம் தீவிர விசாரணை






ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் மீது புகாரளித்தது தொடர்பாக மதுரை வழக்கறிஞரிடம் சைபர் க்ரைம் பொலிஸார் இநேற்று நேரில் விசாரணை நடத்தினர். புகார் குறித்த டிஜிட்டல் ஆவணங்களும் சமர்பிக்கப்பட்டன.

ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் இரு மாநில மக்களிடையே மோதலை தூண்டும் வகையில் பேசியதாகக் கூறி கடந்த 4 ஆம் திகதி மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் வழக்கறிஞர் வாஞ்சிநாதன் என்பவர் புகார் ஒன்றை அளித்தார். இப்புகார் தொடர்பாக விசாரணை நடத்த மனுதாரர் என்ற அடிப்படையில் வழக்கறிஞர் வாஞ்சிநாதனுக்கு சைபர் க்ரைம் பொலிஸார் அழைப்பாணை அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து மதுரை மாநகர சைபர் க்ரைம் காவல் நிலைய அலுவலகத்தில் வாஞ்சிநாதன் நேற்று விசாரணைக்கு நேரில் ஆஜராகி புகார் தொடர்பாக விளக்கமளித்தார்.

இதனைத் தொடர்ந்து பவன் கல்யாண் மீதான புகார் தொடர்பாக, அவர் பேசிய காணொலி, செய்தித்தாள்கள், ஜனசேனா கட்சியின் யூடியூப் பக்கத்திற்கான லிங்க் ஆகிய டிஜிட்டல் ஆவணங்களையும் அவர் சமர்ப்பித்தார்.

# கார்கிவ் மீதான ரஷ்யாவின் தாக்குதலில் இருவர் பலி!

## 30 இற்கும் மேற்பட்டவர்கள் காயம்







உக்ரைனின் 2 ஆவது பெரிய நகரமான கார்கிவ் மீதான ரஷ்யாவின் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ள நிலையில், 30 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

ரஷ்ய எல்லையிலிருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கார்கிவ் நகர் மீது ரஷ்ய படையினர் தொடர் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.


இந்தக் குண்டுத்தாக்குதலில் வீதியில் பயணித்த பொது மக்களே காயமடைந்துள்ளனர் என கார்கிவ் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்த நகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 16 வயது சிறுவன் உட்பட 28 பேர் காயமடைந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த சமயத்தில் ரஷ்யப் படையினர் பயன்படுத்திய ஆயுதங்கள் தொடர்பில் உக்ரைன் அதிகாரிகள் ஆய்வுகளை முன்னெடுத்து வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இரசாயனவியலுக்கான நோபல் பரிசு அறிவிப்பு






2024ஆம் ஆண்டின் இரசாயனவியலுக்கான நோபல் பரிசு மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு துறையில் சிறந்து சேவையாற்றி வரும் விஞ்ஞானிகள் மற்றும் பொதுச் சேவையில் மிகச்சிறந்த முறையில் பங்காற்றியதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, விஞ்ஞானிகளான டேவிட் பேக்கர், ஜோன் ஜம்பர் மற்றும் டெமிஸ் ஹசாபிஸ் ஆகியோர் இம்முறை இரசாயனவியலுக்கான நோபல் பரிசினை பெற்றுள்ளனர்.

கணக்கீட்டுப் புரத வடிவமைப்பு மற்றும் புரத அமைப்பு கணிப்பு ஆகியவற்றுக்காக இந்த ஆண்டு இவர்கள் மூவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.










# வட்டு. இந்துவின் வருடாந்த பரிசளிப்பு விழா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு நாளும் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கல்லூரியில் அமைக்கப் பெற்றுள்ள சரஸ்வதி சிலைக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து தேசியக் கொடி, பாடசாலைக் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அரங்குக்கு அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம், ஆசியுரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரை, மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரிசில்கள் வழங்கல் என்பன நடைபெற்றன.

தொடர்ச்சி▼














# வட்டு. இந்துவின் வருடாந்த பரிசளிப்பு விழா

தொடர்ச்சி▲

கல்லூரியின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக திரு கோணமலை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் நே.விஷ்ணுதாசனும் கலந்து சிறப்பித்தனர்.

ஆசியுரையை வீணாகான குரு பீடத்தின் குரு முதல்வர் சிவஸ்ரீசபா வாசுதேவக்குருக்களும், நிறுவுநர் நினைவுப் பேருரையை கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.நா.அம்பிகைபாகனும் ஆற்றினர்.

இந்தப் பரிசளிப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள், கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், அயல் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பெற் றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.








# 14 முன்னாள் அமைச்சர்கள் மாத்திரமே இல்லங்களை மீள ஒப்படைத்துள்ளனர்

முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகப்பூர்வ இல்லங்களில் 14 வீடுகளே இதுவரை திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களுக்கு கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் 41 உத்தியோகப்பூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டன என அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்தவுடன் அவர்களின் உத்தியோகப்பூர்வ இல்லங்களை ஒப்படைக்குமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்களை மீள கையளிக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சின் உயரதிகாரி குறிப்பிட்டுள்ளார்.




## தேர்தலை கண்காணிக்க 8 நாடுகளின் பிரதிநிதிகள்

பொதுத் தேர்தல் கண்காணிப்பிற்காக 08 நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

சார்க் வலய நாடுகள் மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர் என ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களும் இலங்கைக்கு விஜயம் செய்து பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கவுள்ளனர்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலயமைப்பின் கண்காணிப்பாளர்களும் வருகை தரவுள்ளனர்.

## ரஞ்சன் ராமநாயக்க தலைமையில் புதிய அரசியல் கட்சி உதயமானது




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தலைமையிலான 'ஐக்கிய ஜனநாயக குரல்' எனும் புதிய அரசியல் கட்சி கொழும்பில் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தனது தலைமையில் கட்சியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைவதாக ரஞ்சன் ராமநாயக்க இதன் போது கூறினார்.

3 தடவைகள் நாடாளுமன்றத்திற்கு தெரிவான போதிலும் சில நடவடிக்கைகளால் தனக்கான குடியுரிமை நீக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் இலச்சினையாக ஒலிவாங்கியே வழங்கப்பட்டுள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க கூறுகிறார்.

இதனூடாக குரலற்ற மக்களுக்கு குரலாக செயற்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டி.எம் டில்ஷான் இந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளராக செயற்படவுள்ளதுடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷும் கட்சியில் இணைந்துள்ளார்.

# நுவரெலிய தபாலக காணி திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு மாத்திரம் வழங்கப்படும்

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



நுவரெலியா தபாலகம் மற்றும் காணி என்பன தபால் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு அன்றி வேறு எந்தவொரு நடவடிக்கைக்கும் வழங்கப்பட மாட்டாதென அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

150 ஆம் ஆண்டு தபால் தின நிகழ்வு பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் நேற்று நடைபெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த போதே அமைச்சர் விஜித ஹேரத் இதனை குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -10.10.2024




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதட்டம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேரலாம். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிபடுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.

பதட்டம் மற்றும் அதிகரிக்கும் பணிகள் காரணமாக தலைவலி பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன் னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் அல்லது தொடை வலி ஏற்படலாம்.ஆரோக்கியமாய் இருக்க தியயானம் மேற்கொள்வது நல்லது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -10.10.2024

## தனுசு

இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

இன்று சாதகமான நாள். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுநிலை சுமாராக இருக்கும். உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவது மற்றும் திறமையான தொடர்பாடல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். பணவரவிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இல்லாமல் திடமான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## கும்பம்

பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

## மீனம்

இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAWAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park